**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 4–ஆம் நாள், வியாழக்கிழமை

**<u>இ.ம.எண்.6/2025 இன் அ.வ.எண்.375/2013</u>**

**<u>CNR No. TNSA13-000067-2013</u>**

சின்னு (எ) சின்னுசாமி . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. முருகேசன்
2. ஜோதி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 04.06.2026ம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.ராஜேந்திரமகஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ரவி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி இம்மனுவை காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை மன்னித்து ஏற்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி என்றும், வழக்கானது விசாரணைக்கு உள்ள நிலையில் தாவாவை மனுதாரர் நிரூபணம் செய்வதற்குண்டான மிகவும் முக்கியமான ஆவணம் தற்போது கிடைத்துள்ளதாகவும், மேற்படி ஆவணம் தாவாவிற்கு மிகவும் இன்றியமையாதவை என்றும், அந்த ஆவணம் தற்போது தான் மனுதாரருக்கு கிடைத்ததால் உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலாமல் காலதாமதம் ஆகிவிட்டது என்றும், எனவே இம்மனுவுடன் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்க வேண்டியது அவசியம் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி தாவாவில் வாதிதரப்பு சாட்சிகளாக PW–1 முதல் PW–4 வரை விசாரிக்கப்பட்டது என்றும், வாதி தரப்பு சாட்சிகளாக PW–3 முதல் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய கனம் நீதிமன்றம் பலமுறை வாய்தா அளித்தும் ஆஜராகாத காரணத்தினால் கனம் கோர்ட்டார் அவர்கள் 10.07.2023–ந்தேதி போதிய கால அவகாசம் கொடுத்தும் நீதிமன்றத்தில் சாட்சி ஆஜராகாத காரணத்தினால் வாதி தரப்பு சாட்சி–3 ஐ முடித்து உத்தரவு பிறப்பித்ததாகவும், பின்னிட்டு வாதி தரப்பில் சாட்சி 3 விசாரணை செய்ய வேண்டுமென்று மனுத்தாக்கல் செய்து அம்மனுவானது This petition is allowed on condition of payment of cost Rs.500 to be paid on or before 30.10.2023ம் தேதி நிபந்தனையின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டது என்றும், அதன்பின்னிட்டு வாதியை (PW–1) விசாரிக்க வேண்டுமென்று கனம்

நீதிமன்றத்தில் ஆர்டர் 18 ரூல் 17 மனுத்தாக்கல் அம்மனுவும் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டதாகவும், அதன்பேரில் வாதி தரப்பு சாட்சி PW-1 ன் கூடுதல் நிரூபண வாக்குமூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும், ஆனால் சாட்சி வா.சா.1 சாட்சியானவர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், ஆனால் வாதி தரப்பில் மீண்டும் ஆர்டர் 7 ரூல் 14 மனுத்தாக்கல் செய்தும் கூடுதல் நிரூபணவாக்குமூலமும் கடந்த 17.11.2025 ம் தேதி கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும் கூடுதல் நிரூபண வாக்கமூலத்தின் பேரில் வாதி தரப்பு சாட்சி PW-1 நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் மீண்டும் மனு எண். 6/2025 தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பானது என்றும், மேலும் வாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி வழக்கினை முடிவுக்கு கொண்டு வரக்கூடாதென்ற கெட்ட எண்ணத்திலும், நோக்கத்திலும் வாதி செயல்பட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் குடியிருந்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், .மனுதாரர்/வாதி மனுவில் கூறியுள்ள சாரணங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும், எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியம் என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

6. மனுதாரர்/வாதி தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்க வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி மனுவிற்கு மேல் மனு தாக்கல் செய்வதாகவும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணமானது இவ்வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் அல்ல எனவும், எனவே அந்த ஆவணங்கள் அவசியமற்றது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

மனுதாரர்/வாதி தரப்பில் தற்பொழுது தாக்கல் செய்யப்படும் ஆவணமானது வாதியின் சொத்து வரி ரசீதுகள் என்பதாலும், மேற்கண்ட ஆவணங்கள் இந்த வழக்கில் முடிவு காண உறுதுணையான ஆவணங்கள் என வாதிடப்பட்டதை கருத்தில் கொண்டும், மேற்படி ஆவணங்களை ஏற்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், பிரதிவாதிகள் தனது தரப்பில் மேற்படி ஆவணங்களை பற்றி குறுக்கு விசாரணை செய்து கொள்ள முழுமையான வாய்ப்பு உள்ளது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 4–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.06.04 17:02:15 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. <u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

2. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.06.04 17:02:33 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**முு.மா.உ.நீ. ஆத்தூர்**
அசல்/வரைவு/ உத்தரவு
இ.ம.எண்.6/2025 இன்
அ.வ.எண். 375/2013
நாள் : 04.06.2026